ஆசிரியரிடமிருந்து........!

# கிறிஸ்துமஸ் காலம்



இயேசு கிறிஸ்துவின் உன்னத நாமத்தில் பரிபூரண ஜீவன் வாசகர்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்களை தெரிவிக்கிறேன். வருடத்தின் இறுதியில் வந்திருக்கும் நாம், இந்த வருடம் முழுவதும் தேவன் செய்த நன்மைகளை நினைத்து அவருக்கு நன்றி செலுத்துவோம்!

நாம் அனைவரும் அறிந்தபடி வருட இறுதியில் உலகம் முழுவதும் "கிறிஸ்துமஸ்" மிகுந்த சந்தோஷத்தோடும், ஆரவாரத்தோடும் கொண்டாடப்படுகிறது. கிறிஸ்துமஸ் ஒரு பரபரப்பான காலம். புதிய ஆடைகள், சுவை மிக்க உணவு, கேக், இசை, பாடல்கள், கொண்டாட்டம், பரிசுகள், வீடுகள் தோறும் அலங்கார நட்சத்திரங்கள் என காணப்படுகிற காலமாக விளங்குகிறது. நல்லது! கிறிஸ்துமஸ் காலம் போல எந்தக் காலமும் இவ்வளவு மகிழ்ச்சி தருவதில்லை. ஆனால் வேதாகமத்தில் நாம் பார்க்கும் முதல் கிறிஸ்துமஸ் சற்று வித்தியாசமானது. அதுகுறித்து சற்று தியானிப்போம். அதை நாமும் பின்பற்றுவோம்!

## 1. இது தேவனை மகிமைப்படுத்த வேண்டிய காலம்<br>It is a time of GLORIFYING

இயேசுவின் பிறப்பு, பரலோகத்தையும், பூலோகத்தையும் மகிழ்ச்சிக்குள்ளாக்கியது. பரம சேனையின் திரள் உன்னதத்திலிருந்து "தேவனுக்கு மகிமை" என்று சொல்லி தேவனைத் துதித்தார்கள் (லூக்கா 2:13). ஞானிகள் மிகுந்த சந்தோஷத்தினால் நிரம்பி, இயேசுவைப் போற்றி, ஆராதித்து அவரைப் பணிந்துக் கொண்டார்கள் (மத்தேயு 2:10,11). சிமியோன் இயேசுவை தன் கைகளில் ஏந்திக்கொண்டு தேவனை ஸ்தோத்தரித்தான் (லூக்கா 2:27,28). விதவையான அன்னாள் இயேசுவைப் பார்த்தபோது கர்த்தரை புகழ்ந்தாள் (லூக்கா 2:38). நாமும் தேவன் அருளிய சொல்லி முடியாத ஈவுக்காக அவரைத் துதிக்க வேண்டும் (2 கொரி.9:15). இந்த கிறிஸ்துமஸ் நாட்களில் நம் இருதயம் தேவனைத் துதிப்பதிலும், ஆராதிப்பதிலும், அவருக்கு நன்றி சொல்லுவதிலும் நிறைந்திருக்கட்டும்! நம்முடைய ஆத்துமா அவரை மகிமைப்படுத்தி, நம்முடைய ஆவி இரட்சகராகிய தேவனில் களிகூரட்டும் (லூக்.1:46-47)!

## 2. இது ஒரு கொடுத்தலின் காலம்<br>It is a time of GIVING

தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனாகிய இயேசுவை நமக்காகத் தந்தருளினார் (யோவான் 3:16). இதுவே கிறிஸ்துமஸ். குமாரனாகிய இயேசு, நம்முடைய பாவங்களுக்காக தம்முடைய ஜீவனையே கொடுத்தார் (மத்தேயு 20:28). இப்படி தம்மையே நமக்காக தந்து அன்பு கூர்ந்த இயேசுவுக்கு நம்மையே அவருக்குக் கொடுப்பதைத்

தவிர வேறு என்ன செய்ய முடியும்! உங்கள் இருதயத்திலும் வாழ்க்கையிலும் அவருக்கு இடம் கொடுங்கள் (நீதி.23:26; வெளி.3:20). அவரை இரட்சகராக ஏற்றுக்கொண்டு அவருக்காக வாழ தீர்மானியுங்கள். இதோ, இப்பொழுதே அனுக்கிரக காலம், இப்பொழுதே இரட்சணியநாள் என்று வேதம் கூறுகிறது (2.கொரி. 6:2).

இயேசு பிறந்தபோது சாஸ்திரிகள் வந்து, பொன், தூபவர்க்கம் மற்றும் வெள்ளைப் போளத்தையும் காணிக்கையாக கொடுத்தார்கள் என்று வாசிக்கிறோம் (மத்.2:11). ராஜாவாக பிறந்திருக்கிறவரை பார்க்க வந்த அவர்கள் மகிழ்ச்சியோடு அவருக்கு சிறந்ததை கொடுத்தார்கள். நாமும் கர்த்தருக்கென்று, அவருடைய பணிக்காக கொடுப்போம். சபையில் இந்த நாட்களில் நடைபெறும் ஊழியங்களை உற்சாகமாக தாங்குவோம்!

மேலும், ஏழைகளுக்கும் திக்கற்றோருக்கும் உதவி செய்கிற நாட்களாக இந்த கிறிஸ்துமஸ் நாட்கள் மாறட்டும். நம்முடைய பணம், பொருளை குறையுள்ளவர் களுக்கு பகிர்ந்தளிப்போம்! இயேசுவின் அன்பை வெளிப்படுத்துவோம். நீங்கள் விருந்து செய்யும் போது தரித்திரரையும், முடவர்களையும், சப்பாணிகளையும், குருடர்களையும் அழைத்து உபசரியுங்கள். அப்பொழுது நீங்கள் ஆசீர்வதிக்கப் படுவீர்கள் என்று இயேசு சொன்னார். நீதிமான்கள் உயிர்தெழுதலில் அதின் பலனை பெறுவீர்கள் (லூக்கா 14:12-14). ஆகவே தரித்திரரை நினைத்துக்கொள்ளுவோம் (கலா.2:10). மிகவும் சிறியவர்களாகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் (மத்.25:40)!

## 3. இது நற்செய்தி அறிவிக்கும் காலம்
## It is a time of GOOD NEWS

கிறிஸ்துமஸ், எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தி. இந்த இயேசுவின் பிறப்பின் நற்செய்தியை தூதர்கள் மேய்ப்பர்களுக்கு அறிவித்தார்கள் (லூக்கா 2:10). மேய்ப்பர்கள் தாங்கள் கேள்விப்பட்ட செய்தியை அனைவருக்கும் பிரசித்தம் பண்ணினார்கள் என்று வேதம் கூறுகிறது (லூக்கா 2:17). தேவ ஜனமே, இன்று நாம் இயேசுவின் இரண்டாம் வருகையைக் குறித்து பேசுகிறோம். ஆனால் நம் தேசத்தில், மாநிலத்தில், பட்டணத்தில், கிராமத்தில் இன்று அநேகருக்கு அவரின் முதல் வருகையை பற்றியே தெரியவில்லை. இயேசு இந்த உலகிற்கு மனிதனாக வந்த நோக்கத்தையும், அவர் நமக்காக சிலுவையில் செய்து முடித்த காரியத்தையும் இந்த உலகிற்கு எடுத்துரைப்பது நம்முடைய தலையாயக் கடமையாகும்! ஒரு சிலருக்காவது இயேசுவைக் குறித்து இந்த கிறிஸ்துமஸ் நாட்களில் பகிர்ந்து கொள்ளுங்கள். உங்கள் நண்பர்கள், அயலகத்தார், அண்டை வீட்டார் ஆகியோருக்கு இயேசுவை அறிமுகம் செய்யுங்கள்.அவரைக் குறித்து கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்சி (ரோமர் 10:14) என்று வேதம் கூறுகிறது. இயேசுவை அறிய ஆவலாய் இருப்போரை சபைக்கு அழைத்து வாருங்கள். இயேசு பிறப்பின் நற்செய்தியை அறிவிக்கும் காலமாக இந்த 2022 கிறிஸ்துமஸ் நாட்கள் அமையட்டும்! கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

**Rev. Dr. ஜெரி டேனியல்**
(ஆசிரியர், பரிபூரண ஜீவன்)
மண்டல தலைமைப் போதகர், திருச்சி தெற்கு மண்டலம்.